**<u>சார்பு நீதிமன்றம், இலால்குடி.</u>**

நாள்:20.02.2023 திங்கட்கிழமை
OS.No. 38/2020 PW1: **லாரன்ஸ்**

**<u>சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்</u>**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கிற்கான விபரம் நான் தான் சொன்னேன் . நான் விவசாய தொழில் செய்து வருகிறேன் . பிரதிவாதி எனது உறவினர் ஆவார் . பிரதிவாதியின் குடும்பத்தினரை எனக்கு நன்கு தெரியும். பிரதிவாதிக்கு 2 குழந்தைகள். ஒரு ஆண். ஒரு பெண். பிரதிவாதி விவசாயம் செய்தும், 3 தெரு தாண்டியும் உள்ளார். பிரதிவாதிக்கு ஊரில் சொந்த வீடு மற்றும் 2 ஏக்கர் நிலம் சொந்தமாக உள்ளது . அதன் சர்வே எண் .547/12. பாகம் பிரிக்க போகும் போது சர்வே நம்பர் தெரிந்து கொண்டேன் . சர்வே எண்ணிற்கான ஆவணங்களை என்னிடம் பிரதிவாதி கொடுத்ததில்லை . பிரதிவாதி புரோநோட்டை 23.03.2017 அன்று எழுதிக் கொடுத்தார்.
கடன் கொடுக்கும் போது ஸ்டீபன் தேவராஜ் , குழந்தைசாமியும் இருந்தார்கள். பணத்தை பால்ராஜிடம் குடும்ப செலவிற்காக கொடுத்தேன். புரோநோட்டை ஸ்டீபன் தேவராஜ் எழுதினார். அவர் இருக்கிறார். ஸ்டீபன் தேராஜ் யாருக்கும் உறவினர் இல்லை . மற்றொரு சாட்சி எனது பெரியப்பாவின் மகன் ஆவார். பணம் என் அண்ணன் சவுரியார் வில்லியம் என்பவர் வீட்டில் வைத்து கொடுத்தேன் . இந்த விவரத்தை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான் . வழக்குரையிலும், சத்திய பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதியிடம் பணம் கொடுத்தது சம்மந்தமாக பலமுறை

கேட்டேன். அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் வைத்து எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் சரிதான் . பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கவில்லை என்றும் அவரது சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவரது கையெழுத்தை நானே போட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல . நிலம் சம்மந்தமாக ஆவணங்கள் எதையும் பிரதிவாதி கொடுக்கமாலே நீதிமன்றத்தில் நானாக தாக்கல் செய்திருப்பது தவறு என்றால் சரியல்ல . 2017 ல் பணம் கொடுக்கப்பட்டும் வழக்கு 2020 ல் தாக்கல் செய்திருப்பது தவறு என்றால் சரியல்ல. வழக்குரையில் பிரதிவாதி சொத்தை விற்க போவதாக எங்க ஊர்காரர்கள் மூலம் தெரியும். செல்வராஜ் என்பவர் என்னிடம் சொன்னார். செல்வராஜை விசாரித்தால் அது உண்மையா பொய்யா என்று தெரியும் என்றால் சரிதான் . பிரதிவாதியின் சொத்து ஊரின் ரோட்டில் அமைந்திருப்பதால் அது அதிக விலைக்கு விற்கும் என்பதால் அவரிடம் அதை கிரயம் கேட்டேன் என்றால் சரியல்ல . அவர் விற்க மறுத்தால் இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல . நான் சொல்லும் தேதியில் நான் சொல்லியிருக்கும் தொகையை பிரதிவாதிக்கு கடனாக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல . நான் குறிப்பிட்டுள்ள தேதியில் பிரதிவாதி புரோநோட்டு எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல . எனது வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. மறு விசாரணை இல்லை.

/Signed/
லாரன்ஸ்

/Signed /
A.B.நசீர் அலி, B.A.,B.L.,
சார்பு நீதிபதி(FAC)
இலால்குடி